# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C)

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No. **SC.No.168/2019**
Prosecution: **PW 9**

**Deposition of the witness of LW**

| | |
|---|---|
| **Name** | ஜெ.ஆனந்தன் |
| **Father's Name** | ஜெயராமன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August 2025.

1 முதல் 3–ம் எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 355 BNSS–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>மறு விசாரணை:–</u>**

1) நான் எனது விசாரணையின் போது 29.12.2018–ம் தேதி எதிரி விஜயராகவன் என்பவர் என்னிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காலை 11 மணியளவில் இராணிப்பேட்டை பைபாஸ் ரோட்டில் கே.எச். Shoe கம்பெனி பின்புறம் உள்ள பாழடைந்த கட்டிடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்த Royal Enfield 350 சிசி பதிவு எண் டிஎண் 73 AA 3344 என்ற இருசக்கர வாகனத்தினை அ.த.சா.ஆ.9 கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றினேன். கைப்பற்றபட்ட Royal Enfield 350 சிசி பதிவு எண் டிஎண் 73 AA 3344 என்ற வாகனத்தை படிவம் 95 மூலம் இராணிப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினேன். அந்த படிவம் 95 **அ.த.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) அந்த Royal Enfield 350 சிசி பதிவு எண் டிஎண் 73 AA 3344 என்ற வாகனத்தை அதன் உரிமையாளர் எதிரி விஜயராகவன் நீதிமன்றத்தில் மனு செய்து திரும்பப்பெற்றுக் கொண்டார். அந்த Royal Enfield 350 சிசி பதிவு எண் டிஎண் 73 AA 3344 வாகனத்தின் புகைப்படங்கள் மூன்று **அ.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) நான் எனது முதல் விசாரணையின் போது 29.12.2018 ம் தேதி 8 மணிக்கு சென்னையில் இருந்து சித்தூர் செல்லும் மல்லாடி கம்பெனி சந்திப்பில் வாகன சோதனையின் போது TN 73 M 3344 என்ற Apache இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்களை நிறுத்தி விசாரணை செய்ததாக சொல்லியுள்ளேன். அந்த

சமயத்தில் மேற்படி TN 73 M 3344 என்ற Apache இருசக்கர வாகனத்தை அ.த.சா.ஆ.8 கைப்பற்றுதல் மகசர் மூலமாக எதிரி கார்த்தி என்கிற பேனர்ஜி யிடம் இருந்து கைப்பற்றினேன். அவ்வாறு கைப்பற்றப்பட்ட TN 73 M 3344 என்ற Apache இருசக்கர வாகனத்தின் புகைப்படங்கள் இரண்டு **அ.த.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் 1 முதல் 3 தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) அ.த.சா.ஆ.15 புகைப்படங்கள் சம்மந்தப்பட்ட Royal Enfield 350 சிசி பதிவு எண் டிஎண் 73 AA 3344 மற்றும் அ.த.சா.ஆ.16 புகைப்படங்கள் சம்மந்தப்பட்ட TN 73 M 3344 என்ற Apache இருசக்கர வாகனங்களை காவல் நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என்றால் சரிதான்.

2) கைப்பற்றுதல் மகசர் சாட்சியான பாலமுருகன் என்பவர் தனது சாட்சியத்தின் போது மற்றொரு சாட்சியான பழனிவேல் என்பவருடன் சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அந்த விவரத்தை பாலமுருகன் எனது விசாரணையில் தெரிவித்துள்ளாரா என்றால் சரிதான்.

3) சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் அ.த.சா.ஆ.14 கைப்பற்றுதல் மகசர் வாகனம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/. Tmt.A.Daoudh Ammal.**
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.